தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், போக்குவரத்துத்துறையின் சார்பில், BS VI – 13 புதிய அரசு பேருந்துகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 24.07.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து, பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பா.ஐஸ்வர்யா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மேலாண் இயக்குநர் (த.அ.போ.க.) (கும்பகோணம் கே.எஸ்.மகேந்திரகுமார், பொதுமேலாளர் (த.அ.போ.க.) (புதுக்கோட்டை மண்டலம்) இரா.இளங்கோவன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாசிச ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

திண்டுக்கல் மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

திண்டுக்கல், ஜூலை 26 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக, தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

பா.ஜ. ஆட்சி செய்யாத மாநிலங்களை, ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கிறது. அதேநேரம் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள குறிப்பிட்ட மாநிலங்களுக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. வெள்ள பாதிப்பின் போது ஒன்றிய அமைச்சர்கள், தமிழகத்திற்கு வந்து கோவிலுக்கு சென்று வந்தனரே தவிர தமிழ்நாட்டின் கோரிக்கையை கணக்கில் ஏற்று கொள்ளவில்லை. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதற்கு இங்கு ஒரு இடம் கூட கிடைக்காதது தான் காரணம். 8 முறை பிரதமர் தமிழ்நாடு வந்தும் வெற்றி பெற முடியவில்லை. பா.ஜ.க. ஏமாற்றுவது 8 கோடி மக்களுக்கும் தெரியும். நமது வரிப்பணம் ஜி.எஸ்.டி. மூலமாக பல்லாயிரம் கோடி ஒன்றிய அரசிற்கு செல்கிறது. அதில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி வழங்கப்படவில்லை.

இவ்வாறு ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து அனைத்து மாவட்டதலைநகரங்களிலும் ‘மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடத்தவேண்டும் என்கிற தலைமைக் கழக அறிவிப்பின்படி திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பில் 27.07.2024, சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் திண்டுக்கல், மணிக் கூண்டு அருகில் ‘மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டண ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

வேலூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை

வேலூர், ஜூலை 26 -

வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சமீபத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமல் புறக்கணித்து வஞ்சித்துள்ளார்கள். மேலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்கும் விதமாக அரசியல் காழ்ப்புணர்வோடு பழிவாங்கும் நோக்குடன் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற வார்த்தையே குறிப்பிடாமல் நிராகரித்துள்ளார்கள். தங்கள் அரசுக்கு முட்டுகொடுக்கும் பீகார் மற்றும் ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்கு வரலாறு காணாத அளவில் நிதியை ஒதுக்கி பா.ஜ.க. அரசு தமிழ் நாட்டை வஞ்சித்துள்ளது.

பேரிடர் இழப்புக்கு நிதி வழங்கிட கழகத்தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வைத்த கோரிக்கையை புறம்தள்ளி மாற்றாந்தாய் மனப்போக்குடன் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களில் நடத்திட வேண்டுமென கழகத்தலைவர் அவர்கள் அறிக்கையின் வாயிலாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க வரும் 27.07.2024 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் வேலூர், அண்ணா கலையரங்கம் அருகில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையிலும், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகர செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கிளைகழக செயலாளர்கள், நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்டஅணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிபெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர், தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காங்கேயம், மீனாட்சி மஹாலில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காங்கேயம், வெள்ளகோவில், குண்டடம் ஒன்றியத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், ஊரக வீடுகள் பழுது பார்த்தல் திட்டப்பணி களுக்கான ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் பயனாளிகளுக்கு வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ், நகர கழக செயலாளர்கள் வசந்தம் ந.சேமலையப்பன், சபரி எஸ்முருகானந்தம், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சந்திரசேகரன், சிவ.செந்தில்குமார், கே.கே.சிவானந்தம், கருணை பிரகாஷ், நகரத் துணைச் செயலாளர் சுப்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அரசு என்பது அனைத்து மாநிலங்களுக்குமானதே தவிர தங்களுக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டுமான அரசல்ல!

நிதிநிலை அறிக்கையா? தன் ஆட்சியை தக்க வைத்துக்கொள்வதற்கான திட்டமா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 26 -

ஒன்றிய அரசின் பட்ஜெட் என்பது - தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள ஆந்திரா, பீகார் மாநிலங்களைத் திருப்தி படுத்துவதற்கானதே தவிர, ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கானது அல்ல; தங்கள் மீது வழக்குகள் நிலுவையில் உள்ளவர்கள் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள விபீடணர்களாக மாறி, மோடியின் ஆட்சியையும், பட்ஜெட்டையும் ஆதரிக்கிறார்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

ஒரு நாட்டு அரசின் வரவு - செலவுத் திட்டமான ‘பட்ஜெட்’ என்பது, வெறும் வரவு - செலவுத் திட்டம் என்பதைத் தாண்டி, அரசின் மூலாதாரத் திட்டம் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படுத்தவும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது!

சொந்தக் காலில் நிற்க முடியாத மோடி அரசு!

வெறும் சட்டம் - ஒழுங்கு பராமரிப்புதான் ஓர் அரசின் கடமை என்ற தொடக்க கால சிந்தனையைத் தாண்டி, மக்கள்நலம் பேணும் கடமையைச் செய்யும், அரசுகளுக்கு, குறிப்பாக ஜனநாயக முறை அரசுகளில் (*Welfare State*) நலத் திட்டங்கள்மூலம் செய்யும் மாறுதல் ஏற்பட்டது.

அதன் பிறகு பட்ஜெட் மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்துதல், பண வீக்கத்தைத் தடுத்தல், வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் வரி விதிப்புகளை உருவாக்குதல், வேலை கிட்டாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல் போன்ற அரசின் கொள்கை அமலாக்கக் கருவியாக மாறியது!

ஆனால், பிரதமர் தலைமையில் தற்போது நடைபெறும் - சொந்தக்காலில் நிற்காமல், மைனாரிட்டி அரசுதான்! பி.ஜே.பி. - மற்ற இரண்டு கட்சிகள் தெலுங்குதேசம், பீகாரின் அய்க்கிய ஜனதா தளம் மற்றும் சில உதிரி கட்சிகளின்மூலம் கூட்டணி அரசு அமைத்து, பிரதமர் நாற்காலி சாய்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இந்த முட்டுகளைச் சரியாகப் பார்த்து வரும் கவலை முதல் கவலையாகவே பிரதமர் மோடிக்கு ஏற்றப்பட்டு - அவ்வரசு, ‘நித்திய கண்டம் பூரண ஆயுசு’ என்ற சொல வடைக்கொப்ப நடந்து வருகிறது!

பிரதமர் மோடியே முன்பு பல மாநிலத் தேர்தல்கள் நடைபெற்றபோது, தனி அந்தஸ்து அந்தந்த

மாநிலங்களுக்கு அளிப்போம் என்று கூறி, ஓட்டு வேட்டையாடினார்!

இப்போது அவர்கள் அதை நினைவூட்டிக் கேட்கத் தொடங்கிய நிலையில், 2024 - 2025 ஆம் நிதியாண்டின் பட்ஜெட்டை, தனது நாற்காலியை ஆடாது நிலைக்க வைக்கும் நோக்கத்தில் கணிசமான நிதியை இரண்டு மாநிலங்களுக்கே (ஆந்திரா, பீகாருக்கு) மட்டும் ஒதுக்கி, ஏற்கெனவே வாக்களித்த மற்ற மாநிலங்களுக்கோ பட்டை நாமம் போட்டுவிட்டார்!

தெலங்கானா தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய பொழுது பல சந்தர்ப்பங்களில் கூறியது என்ன?

ஒடிசா மாநிலத்தில் பிஜூ பட்நாயக் ஆட்சியைத் தோற்கடிக்க அதற்குத் தனி அந்தஸ்து தருவதாக நாக்கில் தேன் தடவியது வசதியாக மறந்துவிட்டதா என்ற கேள்விகள் கிளம்பியுள்ளன!

வஞ்சிக்கப்பட்ட மாநிலங்கள்!

தமிழ்நாடு, கேரளம், தெலங்கானா, கருநாடகா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில், அவை முழுமையாக வஞ்சிக்கப்பட்ட நிலை அப்பட்டமாகத் தெரிகிறது!

மாநிலங்கள் இணைந்தால்தான் ஒன்றிய அரசு - இந்திய அரசு என்ற அரசமைப்புச் சட்டத்தின் முதல் கூறு (*First Aritlce*) என்பதைக் கூட மறந்து, தங்களுக்கு முட்டுக்கொடுக்கும் அரசுகளுக்கு அள்ளி அள்ளித் தருதல், எதிர்க்கட்சிகளை வெற்றி பெற வைத்த மாநிலங்களுக்குக் கிள்ளியும்கூடத் தராமல், ஏதோ பழைய சக்ரவர்த்தி ராஜா ஆட்சியில், சிற்றரசர்களைக் கப்பம் கட்ட வற்புறுத்துவதுபோல், ஒருதலை பட்சமாக ஓரவஞ்சனையுடன் நடந்துகொள்வது நியாயமா?

ஒன்றிய அரசிற்குரிய வரவு என்பது மாநில அரசுகள் வசூலித்துத் தரும் பங்களிப்பு காரணமாகவே தானே சேர்ந்த நிதி! ஜி.எஸ்.டி.. ஒன்று போதாதா? நேர்முக வரி, மறைமுக வரி என்ற வகையிலும் ஒன்றிய அரசு வாங்கி, வட்டி கட்டி, கடனைத் திருப்பித் தருவது மாநில மக்களிடமிருந்தும், மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களிலிருந்தும்தானே!

அப்படி இருக்க மைனாரிட்டி ஆக்கப்பட்டு மக்களால் ஒதுக்கப்பட்ட ஒரு கட்சியின் அரசு இப்படிப் பட்ட வித்தைகளாலும், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள், தங்கள் கட்சிக்கு வாக்களிக்காத மாநில மக்களைப் பழி தீர்க்க, நிதி ஒதுக்கீடு செய்யாமல், பட்ஜெட்டை ஓரவஞ்சனையில் ஓவியமாக்கிட்டு, ஒய்யாரப் பேச்சுப் பேசுவது அரசியல் அடாவடித்தனம் அல்லாமல், வேறு என்ன?

ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டும்தான் ஆட்சியா?

தமிழ்நாட்டில், பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து மூக்கறுபட்டு மூலையில் தள்ளப்பட்ட சில கட்சிகளும், அதன் அரைவேக்காட்டுத் தலைவர்களும் எங்களுக்கு 25 இடங்களில் வெற்றி பெற வைத்திருந்தால், நிதி கொட்டியிருக்கும் என்று பேசுவது அரசியல் அறியாமை மட்டுமல்ல; அரசமைப்புச் சட்டத்தின் புரியாமையும்கூட!

ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டும்தான் ஓர் அரசு, தேர்தலுக்குப் பின்னர், அதற்காகவே நாங்கள் மக்கள் தரும் வரிப் பணத்தை தன்னிச்சையாக, நாங்கள் வழங்குவதில் இன்னார் - இனியார் என்ற பாகுபாடு காட்டுவோம் என்பதை வெளிப்படையாகவே சொல்வது - கீழிறிக்க அரசியலாக மலிவான பேரக்களமாக ஆக்கிவிட்டது மகா மகா வெட்கக்கேடு அல்லவா?

விபீடணர்களாகி விடுவதா?

மக்கள் வரிப் பண விநியோகம் ஆளும் கட்சி தரும் பணமோ, நிதியோ அல்ல! மக்கள் பணம்! ஜனநாயகத்தில் ஆட்சி செலுத்துவோர் தனிக்காட்டு ராஜாவாக ஆள முடியாது!

சில குற்ற வழக்குகளில் சிக்கி தங்களை விடுவித்துக் கொள்ள தேசிய ஜனநாயக கூட்டணியினர் என்ற பிரதமர் மோடி தலைமையிலான கூட்டணி அரசில் நீடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளதால், இவர்கள் தமிழ்நாட்டு நலனைக் காட்டிக் கொடுக்கும் விபீடண, சுக்கிரீவன் அடையாளங்களாகி வலம் வருகின்றனர்!

மக்கள் தரும் தோல்வி பற்றிக்கூட கவலைப்படாமல், இப்படி அரசியல் உளறல் ஊற்றுக்களாகி, தங்களது ஆணவ அறியாமைக்கு வெளிச்சம் போட்டுள்ளனர்.

மக்கள் விரோதிகள் நாங்கள் என்று பகிரங்கப்படுத்துகிறார்கள் - பரிதாபத்திற்குரிய இவர்கள்!

மக்கள் மன்னிக்கமாட்டார்கள்!

தமிழ்நாடு என்று முன்பு மூச்சுக்கு முந்நூறு முறை கூறியவர், தமிழ்நாட்டு வெள்ள நிவாரணத்திற்கு கிள்ளிக்கூடத் தராது, வட மாநிலங்களுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் கொடுப்பது நியாயமா? என்று கேட்கத் துணிவில்லாத துன்மார்க்க அரசியல் வியாதிகளை தேர்தலின்போது, மக்கள் அறவே துடைத்தெறிந்து விரட்டுவார்கள் என்பது உறுதி!

‘உன்னை விற்காதே’ என்றார் புரட்சிக்கவிஞர்! தன்னைத் தேர்தலுக்கு விற்றுக் கொள்ளும் இவர்கள், இப்படி நடப்பதை தமிழ் மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்! நாளும் தேய்ந்து வந்த பிறகும், தெளிவு பிறக்கவில்லையே! காரணம், ‘மடியில் கனம், வழியில் பயம்’ - பல சிக்கல்களிலிருந்து மீள இப்படி ஒத்து ஊத வேண்டுமா?

முதலமைச்சர் புறக்கணிக்கும் காரணம்!

பட்ஜெட்டில், தமிழ்நாடு - பெயர் வரவில்லை என்று எந்தப் பொருளில், எதற்காகக் கேட்கிறார்கள் என்பதுகூட புரியாமல், தங்களை மேதைகள்போல எண்ணும் அரசியல் சூன்யங்களுக்கு மக்கள் பல முறை பாடம் கற்பித்தும், புத்திக் கொள்முதல் செய்து கொள்ளாமல் உலா வருவது அவலமல்லவா!

நமது முதலமைச்சர் தமிழ்நாட்டின் எதிர்ப்பினை வெளிப்படுத்த ‘நிட்டி ஆயோக்’ கூட்டத்தினைப் புறக்கணித்துப் பதிவு செய்துள்ளார்!

மோடி ஆட்சி நீடிக்குமா - நிலைக்குமா?

தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற பல மாநிலங்களின் (தெலங்கானா, கருநாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம்) முதலமைச்சர்களும் புறக்கணித்துள்ளனர். இங்கு எப்படிப்பட்ட பழிவாங்கும் ஓரவஞ்சனை அரசு - மக்கள் விரோத அரசாக நடக்கிறது என்பதை உலகிற்கு அறவழியில் பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள்.

எனவே, இந்த நிதிநிலை அறிக்கை மக்களைக் காப்பாற்ற வெளியிடப்பட்ட நியாயமான பட்ஜெட் அல்ல! மாறாக, தங்களை, தங்கள் நாற்காலிகளைக் காப்பாற்றிட போடப்பட்ட ஒரு ‘பெஃவிகால் ஒட்டுக்கான பட்ஜெட்’டே தவிர, வேறில்லை.

இப்படியே நடவடிக்கைகளை மோடி அரசு தொடர்ந்தால், அதன் ஆட்சி தொடர்வது நீடிக்குமா? நிலைக்குமா? என்பது மில்லியன் டாலர் கேள்வியாகும்!

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் 90 பேருக்கு பட்டா!

அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்!

தூத்துக்குடி, ஜூலை 26 -

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குடியிருந்து வருபவர்களிடம் கடந்த 18ம் தேதி வடக்கு மண்டல அலுவலகத்தில் அமைச்சர் கீதாஜீவன் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். அதில் 325 மனுக்கள் பெறப்பட்டன. கோமதி பாய் காலணி, சக்திவிநாயகபுரம், ஸ்டேட்பாங்க காலணி, நடராஜபுரம், ஆகிய பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு டூவிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் 90 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கி செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது:

“90 பேருக்கு இன்றயை தினம் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதி உள்ளவர்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று கள ஆய்வு செய்து வருவாய் துறை அதிகாரிகள் பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்கள். இதே போல் நகரில் பிற பகுதிகளில் மக்கள் பட்டா பெறாமல் இருந்தாலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனி கவனத்திற்கு கொண்டு சென்று அவர்களுக்கும் பட்டா வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் சென்னையை சுற்றியுள்ள பகுதியில் பட்டா வழங்கியுள்ளார்கள். கணினி பட்டா இல்லாத மக்கள் நம்முடைய பகுதியிலும் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்றும். மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களுக்கு கள ஆய்வு செய்து திரும்ப வழங்க கனிமொழி எம்.பி. ஏற்பாடு செய்துவருகிறார். மேலும் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள விளையாட்டு அரங்கை சீரமைத்து பராமரித்து நல்ல முறையில் வீரர்கள் பயன்படுத்தும் வகைக்கு விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் சிறப்பு நிதி ஒதுக்கியுள்ளார். 4ம்இரயில்கேட் பகுதியில் மேம்பாலம் அமைப்பதற்கு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருக்கு கோரிக்கை வைத்துள்ளோம் அதில் அமைப்பதற்காக வழிகள் உள்ளது என்று பதில் தந்துள்ளார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரைவில் 4ம் கேட் மேம்பாலம் அமைத்து தருவதாக கூறியுள்ளார்” என்று அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் பிரபு, தாசில்தார் பிரபாகரன், மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், மாநகராட்சி மண்டல தலைவர் வக்கீல் பாலகுருசாமி, கவுன்சிலர்கள் தெய்வேந்திரன், அதிஷ்ட மணி, கண்ணன், சரவணக்குமார், கற்பககனி, பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரி தங்கம், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், வட்டச் செயலாளர்கள் செந்தில்குமார், குட்டி, சந்தனமாரிமுத்து, கருப்பசாமி, மாவட்ட மருத்துவரணி தலைவர் அருண்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அபிராமிநாதன், துணை அமைப்பாளர் பிரபு, மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், துணை அமைப்பாளர் ரவி, மாநகர கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் அற்புதராஜ், மாநகர வக்கீல் அணி தலைவர் நாகராஜன்பாபு, பகுதி பிரதிநிதி பேச்சிமுத்து, வட்டப் பிரதிநிதி பாஸ்கர், மணி, அல்பட், கணேசன், மாரிமுத்து, காங்கிரஸ் மண்டலத்தலைவர் சேகர், உள்பட அரசுத்துறை அலுவலர்கள் பயனாளிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.